OS No.215/2010
Date:06.12.2019
Name:Vasanthapriya
DW2(cross continuation)
Address:

5முதல் 7பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

கோவிந்தராஜூம், கௌசல்யாவும்முதல் வாதியின் சம்பந்தி என்றால் சரிதான். ஆண், பெண் வாரிசுகள் அனைவருக்கும், தந்தையின் அனைத்து சொத்துக்களிலும் சம உரிமை உள்ளது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளாகிய எங்கள் அத்தைகள் எங்களிடம் இந்து சொத்துஉரிமை சட்டத்தின் படி ஆண், பெண் வாரிசுகளுக்கு அனைத்து சொத்துக்களிலும், சம உரிமை இருப்பதால் தான் நாங்கள் ஒன்றின் கீழ் ஐந்து என்ற உரிமையை கேட்கிறோம் என்று எங்களிடம் கூறினார்களா என்றால் ஆமாம். அது தான் நடைமுறை என்றும், நம் சொந்தபந்தத்தின் பழக்க வழக்கமாக இருக்கிறது என்று வாதிகளும், நாங்களும் கூறுகிறோம் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் வாதிகளின் கணவர்கள், மூன்றாம் நபருக்கு சுயார் ஜிதமாக ஊத்துக்காடு கிராமத்தில் உள்ள வீட்டை விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். ஊத்துக்காடு கிராமத்தில் வாதிகள் தகப்பனார் கோபால்நாயுடு என்பவர் சுயார் ஜிதமாக கிரையம் பெற்று அவர் காலம் ஆன பிறகு வாதிகளின் குடும்பத்தாருக்கு கிடைக்கபட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் வீட்டின் பாதி வாதிகளின் கணவருடையது மற்றும் மீதி பாதி வீடு எத்திராஜூலுநாயுடுக்கு சொந்தமானது, அதை யாரும் விற்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி நாகேஷ்வீட்டிற்கும், காலிபுழக்கடைக்கும்-கிழக்கு என்று போட்டுள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது, அதனால் அந்த வீடு 1ம் பிரதிவாதிக்கு தான் சொந்தம் என்று சொன்னால் சரியல்ல. இது எல்லாம் தெரிந்தும் கூட நாங்களும், வாதிகளும், இயற்கை ரீதிக்கு புறம்பாக வழக்கை குழப்புவதற்காக போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1வீட்டு சொத்தில் 3ம் பிரதிவாதியான நாங்களும், எங்கள் குடும்பத்தாரும், 1ம் பிரதிவாதி குடும்பத்தினரும் தனிதனி பகுதியாக தனிதனி வழி வைத்து வாழ்ந்து வந்தது உண்மை என்பதால் நாங்கள் ஏன் அந்த வீட்டை விட்டு வர அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் இப்போது இருக்கும் வீடு சொந்தவீடு என்றால் சரிதான்.

ஆகையால் தாவா முதல் ஐயிட்ட வீட்டில் அப்போது வசதி குறைவாக இருப்பதாலும், வட சென்னை வண்ணாரபேட்டை என்ற பகுதியில் மிகவும் வசதி வாய்ப்பு குறைந்த பகுதி என்பதாலும் அங்கு நாங்கள் வந்தோம் என்று சொன்னால் சரியல்ல,1985ல் என் அப்பா இறந்து வுடன் 1ம் பிரதிவாதி நாகேஷ்வரராவ் என்பவர் தான் எங்களை அனுப்பி விட்டார். வற்புறுத்தி அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள், எங்களுக்கு வருமானம் கொடுப்பதாகவும், அரிசி கொடுப்பதாகவும் சொன்னார்கள்.

**(5முதல் 7பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**